RNI-N0: TNTAM/2021/83936

9842961596, 9384761596
ஹோட்டல் ஸ்ரீ பழனிஸ் சைவம்
HOTEL SREE PALANIS
Veg
உணவு ஆர்டர் தேவைக்கு : 80980 97273
மேல்கரை மெயின் ரோடு - மானாமதுரை

# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-202

கார்த்திக் மருத்துவமனை
மனோ CT ஸ்கேன்
24 மணி நேர சேவை
சிவகங்கை
Dr.மணிவண்ணன் MBBS.,MD.,
Dr.கார்த்திக்ராஜன் MS.,
No 28 மதுரை ரோடு - சிவகங்கை 630 561 Ph : 04575 241 604. 246516 Cell: 9442341604. 8015741604

சிவகங்கை | மலர்-4 | இதழ்-88 | 05 ஏப்ரல் | சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில்

தாயமங்கலம், இளையான்குடி வட்டம் - சிவகங்கை மாவட்டம் 1434 ஆம் பசலி

## பங்குனிப் பெருந்திருவிழா

**29.03.2025 முதல் 08.04.2025 வரை நடைபெறுகிறது**



### நிகழ்ச்சிநிரல்

| | | |
|---|---|---|
| 29.03.2025 | சனிக்கிழமை | காலை நவசக்தி ஹோமம்<br>மாலை லெட்சார்ச்சனை ஆரம்பம்<br>இரவு காப்புகட்டு |
| 30.03.2025 | ஞாயிற்றுக்கிழமை | காலை லெட்சார்ச்சனை |
| 05.04.2025 | சனிக்கிழமை | பொங்கல் வைபவம் |
| 06.04.2025 | ஞாயிற்றுக்கிழமை | மாலை மின்சார தீப அலங்காரத்துடன் ரதம் |
| 07.04.2025 | திங்கள்கிழமை | காலை பால்குடம் இரவு புஷ்ப பல்லாக்கு |

பக்தகோடிகள் அனைவரும் வருகை தந்து அம்பாளின் திருஅருளைப்பெற அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**மு.வெங்கடேசன் செட்டியார்**
**பரம்பரை அறங்காவலர் - தாயமங்கலம்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மதுரையில், நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன் இல்லத்திற்கு நேரில் சென்று, அண்மையில் அவரது தந்தை இரா. சுப்புராம் காலமானதையொட்டி அன்னாரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் ஆகியோர் உடனிருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு அருகே இருக்கும் சேவகம்பட்டி கிராம விவசாயிகளுக்கு மதுரையில் உள்ள வேளாண்மை கல்லூரி மாணவர்கள் மணிகண்ட சுப்பிரமணி கணபதி ஊரக வேளாண்மை பணி அனுபவத்திட்டத்தின் ஒரு பகுதியாக நெல் விதை கடினப் படுத்தும் முறைகள் மற்றும் செய்முறையை விளக்கினார்கள் அதனை எவ்வாறு செய்வது மேலும் அதனை செய்வதனால் ஏற்படும் நன்மைகள் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை மூலம் விளக்கம் அளித்தனர்.



ராமநாதபுரம் மாவட்டம் அருகே வன்னிவயல் என்னும் கிராமத்தில் வசித்து வரும் இராமாயி வேலு ஐந்து தலைமுறைகளை கண்டுவிட்டார். அவர்களின் நூறாவது பிறந்தநாளை கொண்டாடும் விதமாக அவர்களின் குடும்பத்தினர் ஒன்று சேர்ந்து இராமாயி நூற்றாண்டு விழாவினை கேக்வெட்டியும், இனிப்புகள் வழங்கியும் வெகுசிறப்பாக கொண்டாடினர்.இவ்விழாவில் மகன்கள் மருமகள்கள் ,மகள்கள் மருமகன்கள் ,பேரன்கள் பேத்திகள் ,கொள்ளுப்பேரன்கள் கொள்ளுப்பேத்திகள் ,எள்ளுப்பேரன்கள் எள்ளுப்பேத்திகள் என 100க்கும் மேற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.நிகழ்வில் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் பொதுமக்கள் இராமாயிடம் ஆசிபெற்று வணங்கினர்.

## மானாமதுரையில் நகை மோசடியில் வங்கி மேலாளர் உட்பட மூன்று பேர் மீது வழக்கு

மானாமதுரை ஏப்.5

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ராஜகம்பீரத்தில் பேங்க் ஆப் மகராஷ்டிரா வங்கி செயல்பட்டு வருகிறது இங்கு ஆதனூர் கிராமத்தை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் பேங்க் ஆஃப் மஹாராஷ்டிரா வங்கியில் 12 பவுன் தங்க நகையை அடமானம் வைத்து பணம் பெற்று உரிய நேரத்தில் திருப்ப முடியவில்லை. இதனையடுத்து பேங்க் ஆஃப் மஹாராஷ்டிரா நகை மதிப்பீட்டாளர் சீதாலட்சுமியும் சிவகங்கையில் உள்ள வங்கி மேலாளர் ரவி யிடம் தொடர்பு கொண்டு தங்களது வாடிக்கையாளர் நகையை திருப்ப முடியவில்லை. உங்கள் வங்கி மூலமாக திருப்பி கொள்ளுங்கள் என கூறியுள்ளார். பேங்க் ஆப் மகாராஷ்டிரா மேலாளர் யிடம் நகையில் எந்த பிரச்சினை இல்லையே என்று கேட்டுள்ளார் அவரும் எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறியுள்ளார் இதனையடுத்து 5 லட்சத்து 21 ஆயிரத்து 346 ரூபாய் பணத்தை செலுத்தி நகையை திருப்பியுள்ளார். அவருடைய வங்கியில் போய் நகையே ஆய்வு செய்த போது போலியான நகை என தெரியவந்துள்ளது. இது குறித்து மானாமதுரை காவல் நிலையத்தில் ரவி கொடுத்த புகாரின் பேரில் வங்கி மேலாளர் ராமலட்சுமி , நகை மதிப்பீட்டாளர் சீதாலட்சுமி, அடமானம் வைத்த மானாமதுரை ரயில்வே காலனி ராஜேந்திரன் ஆகிய 3 பேர் மீது வழக்கு பதிந்து விசாரிக்கின்றனர்.

## மானாமதுரையில் ஒரு பெண்ணை இரு இளைஞர்கள் காதலித்த விவகாரத்தில் இளைஞர்க்கு சரமாரி வெட்டு

மானாமதுரை ஏப்05

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே ஆதனூர் பகுதியைசேர்ந்த முத்துக்குமார் மகன் லோகேஸ்வரன் (24). இதே போல் கிளங்காட்டூரை சேர்ந்த பாலா என்பவரும் ஒரே பெண்ணை காதலித்து வந்துள்ளதாகவும் . இதில் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதை தொடர்ந்து கிழங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த வினோத் இருதரப்பையும் பேச அழைத்துள்ளார் அப்போது இருதரப்பினருக்கும் இடையே வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து ஆதனூர் பகுதியில் லோகேஸ்வரன் மற்றும் கவுதம் ஆகியோர் நின்று கொண்டிருந்த போது அங்கு வந்த எதிர் தரப்பைச் சேர்ந்த கிழங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த வினோத் (23) பிரதாப் (24) ராஜேஷ்( 24) இந்துராஜா (26) ஆகிய 4 பேர் லோகேஸ்வரனை ஆபாசமாக பேசியதோடு இல்லாமல் அரிவாளால் வெட்டியதாக கூறப்படுகிறது. இதில் பலத்த காயமடைந்த லோகேஸ்வரன் மதுரையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மானாமதுரை காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து மேற்கண்ட 4 பேரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்..

## திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் பணி வாய்ப்பு

திருப்பூர், ஏப்.5

திருப்பூர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவில் LEGAL AID DEFENSE COUNSEL SYSTEM என்ற பிரிவிற்கு தகுதி மற்றும் திறமை வாய்ந்த வழக்கறிஞர்களிடமிருந்து CHIEF LEGAL AID DEFENSE COUNSEL பணியிடத்திற்கான தொகுப்பூதியம் அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் /சார்பு நீதிபதி தகவல் !

திருப்பூர் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவில் LEGAL AID DEFENSE COUNSEL SYSTEM என்ற பிரிவிற்கு தகுதி மற்றும் திறமை வாய்ந்த வழக்கறிஞர்களிடமிருந்து CHIEF LEGAL AID DEFENSE COUNSEL பணியிடத்திற்கான தொகுப்பூதியம் அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மேற்கண்ட பணியிடத்திற்கான தகுதி, தேர்வுமுறை, விண்ணப்பம் மற்றும் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி குறித்த இதர தகவல்களுக்கு திருப்பூர் மாவட்ட நீதிமன்ற இணையதளமான https://districts.ecourts.gov.in/tiruppur பார்வையிடுமாறு திருப்பூர் ஆணைக்குழுவின் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் /சார்பு நீதிபதி தெரிவித்துள்ளார்

# மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மதுரை மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு




மதுரை, ஏப்.5

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மதுரையில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய 24வது மாநாட்டின் "கூட்டாட்சிக் கோட்பாடே இந்தியாவின் வலிமை" சிறப்பு கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிகழ்வில், மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், கர்நாடக மாநில உயர்கல்வித் துறை அமைச்சர் சுதாகர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவரும், ஒருங்கிணைப்பாளருமான பிரகாஷ் காரத், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் சண்முகம், முன்னாள் செயலாளரும், மத்திய குழு உறுப்பினருமான கே. பாலகிருஷ்னன், நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர் கோ. தளபதி, மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கணேசன், மதுரை புறநகர் மாவட்ட செயலாளர் இராஜேந்திரன் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தேனி வீரபாண்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சார்பாக, கல்லூரி முதல்வர் முனைவர்.உமாதேவி அறிவுறுத்தலின் படி "போதையில்லா தமிழகம்" விழிப்புணர்வு பேரணியை வீரபாண்டி பேரூராட்சித் தலைவர் கீதாசசி அவர்கள் தலைமை தாங்கி துவக்கி வைத்தார்கள். 'போதை ஒழிப்பு' குழுவின் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.து.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கௌரவ விரிவுரையாளர் கள் , முனைவர். செல்வராஜ், முனைவர். சீனிவாசன், முனைவர் ராஜு மற்றும் மாணவ, மாணவியர்கள் கலந்துகொண்டு பேரூராட்சி அலுவலகத்தில் தொடங்கிய பேரணி வீரபாண்டி கிராமத்தில் நிறைவடைந்தது.

# அலட்சியப் போக்கில் அழகர் கோவில் சாலை விரிவாக்கம் பள்ளத்தில் போடப்படும் ரூபாய் 22 கோடி !

மதுரை, ஏப்.5

கள்ளந்திரி பாலத்திற்கு முன்பிருந்து அழகர் கோயில் கோட்டை வாசல் வரை சாலை விரிவாக்க பணிகள் மேற்கொள்ள ரூ.22 கோடியில் பூமிபூஜை போடப்பட்டது. இதன்படி, முதற்கட்டமாக அழகர்கோயில் சாலையில் பொய்கைகரைபட்டியிலிருந்து நத்தம் செல்லும் சாலை பிரிவிற்கு அருகே துவங்கி 275 மீட்டர் தூரத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் பணிகள் துவங்கி உள்ளன. இதில் முதற்கட்டமாக தூண்கள் எழுப்ப தேவையான எண்ணிக்கையில் குழிகள் தோண்டும் பணிகள் நடக்கின்றன. சாலை முழுவதும் தோண்டப்பட்டுள்ள குழிகள் குறித்த எந்த ஒரு முன்னெச்சரிக்கை தடுப்பும் வைக்கப்படாததால் அழகர் கோவிலுக்கு சென்று வரக்கூடிய வாகனங்கள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. அதிலும் இரவு நேரத்தில் செல்லக்கூடிய வாகனங்கள் அடிக்கடி விபத்தை சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதில்



ஒப்பந்ததாரர் பணி நடக்கும் போது நெடுஞ்சாலை துறை சார்பில் கோட்ட பொறியாளர் மோகன காந்தி கட்டுமான மற்றும் பராமரிப்பு உதவி கோட்ட பொறியாளர் ஆனந்த் உதவி பொறியாளர்கள் என யாருமே பணிசெய்யும் இடத்தில் இருப்பதில்லை இதனால் பல பள்ளம் தோண்டப்பட்ட அனைத்து இடங்களிலும் குறைவான மணல்களைக் கொண்டு நிரப்பிய மணல் மூடைகள் தடுப்புக்காக வைக்கப்பட்டுள்ளது.

இவையும் கிழிந்த நிலையில் காணப்படுவதால் பல்வேறு இடங்களில் வாகனங்கள் பள்ளத்தில் இறங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனால் மதுரையின் மிக முக்கிய பகுதியான அழகர் கோவிலுக்கு தரிசனத்திற்கு வரும் பக்தர்கள் பாதிப்படைந்துள்ளனர் நெடுஞ்சாலை துறையின் இந்த அலட்சிய போக்கை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இப்பகுதி மக்கள் வலியுறுத்தி வருகின்றனர்

# 'எம்புரான்' திரைப்படத்திற்கு எதிராக மானாமதுரை தியேட்டர் முன்பு விவசாயிகள் போராட்டம்!

மானாமதுரை ஏப்.5

தமிழகமெங்கும் "எம்புரான்" திரைப்படத்தை தடை செய்யக் கோரி பல்வேறு இடங்களில் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்நிலையில், சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சீனியப்பா திரையரங்கில் நேற்று வரை "எம்புரான்" படம் திரையிடப்பட்டு உள்ளது

பூர்வீக வைகை பாசன கூட்டமைப்பு சார்பில், தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு, முல்லைப் பெரியாறு வைகை பாசன விவசாயிகள் சங்கங்கள் இணைந்து, ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இந்த ஆர்ப்பாட்டத்தில் முல்லைப் பெரியாறு வைகை பாசன விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் ஆதிமூலம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தென் மண்டல தலைவர் கட்டிக்குளம் மாணிக்கவாசகம் ,வைகை பாசன சங்க நிர்வாகி மதுரை



வீரன், மாவட்டத் தலைவர் தமராக்கிராமலிங்கம் ,மாவட்ட பொருளாளர் மாயாண்டி ,சாமி உட்பட விவசாயிகள் 65க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர்.

திரையரங்கம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது மேலும் தமிழ்நாடு கேரளா மக்களுடைய கலவரத்தை தூண்டும் வகையில் எம்ரான் திரைப்படத்தை தயார் செய்த கோகுலம் சிட்பண்ட்ஸ் உரிமையாளர் கைது செய்ய வேண்டும் முல்லைப் பெரியார் அணையை இடிக்கும் சதியுடன் தயாரிக்கப்பட்ட எம்பிரான் திரைப்படத்தை தடை செய்ய வேண்டும் என கோஷம் எழுப்பினர்

திடீரென தியேட்டர் முன்பு "எம்புரான்" படத்திற்கான காட்சிகள் தியேட்டர் பராமரிப்பு காரணமாக ரத்து செய்யப்பட்டதாக பதாகைகள் வைக்கப்பட்டிருந்தது தியேட்டர் முன்பு இருப்பினும், விவசாயிகள் திரையரங்கம் முன்பு கூடி, "எம்புரான்" திரைப்படத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கிறது.



திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு ஒன்றியம், செங்கட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், நூற்றாண்டு முப்பெரும் விழா, வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்த விழாவிற்கு, இடைநிலை மாவட்ட கல்வி அலுவலர் நாகேந்திரன், திண்டுக்கல் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் வெற்றிச்செல்வி, ஆகியோர் தலைமை வகித்தனர்.

# தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணி நியமன ஆணை வழங்கும் விழா





தேனி, ஏப்.5

தேனிமேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பல்வேறு நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் பெற்ற மாணவியர்களுக்கு "பணிநியமன ஆணை வழங்கும் விழா" கல்லூரியின் கர்மவீரர் காமராஜர் கலையரங்கில் நடைபெற்றது. கல்லூரி செயலாளர் காசி பிரபு வரவேற்புரையாற்றினார். தேனி மேலப்பேட்டை இந்துநாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ் பொதுச்செயலாளர் ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கல்லூரியின் இணைச் செயலாளர்கள் செண்பக ராஜன், அருண், கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா, துணை முதல்வர்கள் சுசீலாசங்கர். முனைவர் உமாகாந்தி, முனைவர் கிருஷ்ணவேணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரியின் துணை முதல்வர் முனைவர்.சரண்யா வேலைவாய்ப்பு முகாமை பற்றி விளக்கி பேசினார்.

கல்லூரி வேலைவாய்ப்பு துறை தலைவர் அகிலா வைஷ்ணவி வேலைவாய்ப் பிற்கான ஆண்டறிக்கையை வாசித்தார்.

விழாவில் சிறப்பு விருந்தின ராக கல்லூரியின் முன்னாள் மாணவி சாப்ட்வேர் என்ஜினியர் பூஜா ஏஜ/ எம்எல் அனலைஸ்ட், கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில்

"நமது கல்லூரி மாணவி யர்களின் அறிவை வளர்ப்ப தோடு மட்டுமல்லாமல் அனைவரும் வேலைவாய்ப் பினை பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு செயல்பட்டு வருகிறது. அதற்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து பயிற்சிகளுக்காகவும் வேலைவாய்ப்பிற்காகவும் வல்லுநர்கள்,பயிற்சியாளர்கள் அழைக்கப்பட்டு மாணவியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றுரைத்தார்.

இன்றைய உலகில் வேலைவாய்ப்பு என்பது ஒரு மிக முக்கியமான தரமாக மாறியுள்ளது. கல்வி மட்டும் போதாது, வேலைவாய்ப்பு திறன் இருந்தால்தான் நாம் எதிர்காலத்தை வெற்றிகரமாக அமைத்துக்கொள்ள முடியும். சிறந்த நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை பெற தொழில்துறை சார்ந்த அறிவு, பேசும் திறன், குழுவாக வேலை செய்யும் திறன், நேர மேலாண்மை, கம்ப்பூட்டர் அறிவு, ஆய்வகத் திறன், டேட்டா பகுப்பாய்வு போன்றவை முக்கியம், இவை அனைத்தையும் பயிற்சி வாயிலாக மட்டுமே வளர்த்துக் கொள்ள முடியும் " என்று பேசினார்.

பல்லேறு நிறுவனங்களில் பணிபுரிய 938 மாணவிகளுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் முடிவில் கல்லூரியின் வேலைவாய்ப்பு துறை ஒருங்கிணைப்பாளர் பிரியதர்ஷினி நன்றி கூறினார்.

# சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் ஐம்பெரும் விழா



சிவகங்கை, ஏப்.5

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் ஐம்பெரும் விழாவில் மூன்றாம் நாள் நிகழ்வாக நுண்கலை மன்ற விழா நேற்று கல்லூரியில் நடைபெற்றது. கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி தலைமை வகித்து நுண்கலை மன்றத்தின் சார்பாக அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் சார்பாக பல்வேறு போட்டிகளில் பங்கேற்று கல்லூரிக்குப் பெருமை தேடித்தந்த மாணவர்களை பாராட்டிப் பேசினார். கல்லூரியின் நூண்கலை மன்ற உறுப்பினர் ஆங்கிலத் துறை உதவிப் பேராசிரியர் ஷர்மிளா வரவேற்புரை ஆற்றினார்.

நுண்கலை மன்ற ஒருங்கிணைப்பாளர் தமிழ் துறை இணைப் பேராசிரியர் செல்வமீனா ஆண்டறிக்கை வாசித்தார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தின் தேர்வாணையர் முனைவர் ஜோதிபாசு தான் கல்லூரியில் பயின்ற போது நுண்கலை மன்றத்தின் மூலம் பெற்ற வெற்றிகள் தான் தன்னை ஆராய்ச்சியிலும் உயர் கல்வியிலும் சாதிக்கத் தூண்டியது என்றும் கூறி நுண் கலை மனிதனை செம்மையாக்கும் என்று கருதியதால் தான் வள்ளல் அழகப்பர் இப் பல்கலைக் கழகத்தில் நுண்கலைத்துறை ஒன்றை உருவாக்கினார் என்றும் தன் சிறப்புரையில் விளக்கிக் கூறினார்.

பல்வேறு போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்ற மாணவ மாணவியருக்கு சான்றிதழ்களும், பரிசுக் கோப்பைகளும் வழங்கப்பட்டன. நுண் கலை மன்ற உறுப்பினர் வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் லட்சுமணக்குமார் நன்றி கூறினார்.

இவ்விழாவில் ஆசிரியர்களும், ஆசிரியர் களல்லாப் பணியாளர்களும் மாணவ, மாணவிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் வட்டத்தில் ஊரக வேளாண் அனுபவ திட்டத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவிகள் ஈடுபட்டுள்ளனர். மாணவி அம்ருதா மேனன் விதை நேர்த்திசெய்யும் முறை பற்றி விவசாயிகளுக்கு செய்து கட்டினார். நெல் தீவிரப்படுத்தல் முறை என்பது மகசூலை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு முறையாகும், அதே நேரத்தில் தண்ணீர், ஊட்டச்சத்துக்கள் மற்றும் உழைப்பின் தேவைகளைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. முக்கிய கொள்கைகள் முன்கூட்டிய நடவு, மாற்று ஈரமாக்குதல் மற்றும் உலர்த்துதல், பரந்த இடைவெளி, குறைக்கப்பட்ட நீர் பயன்பாடு மற்றும் கரிம உரங்கள். பாரம்பரிய முறையுடன் ஒப்பிடும்போது 25 30% வரை மகசூலை அதிகரிக்க முடியும் என்று தெரிவித்தனர்.

# கலெக்டரின் உறவினர் என கூறி ரூ. 1 கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக போலீஸ் இன்ஸ்பெக்டர் நெப்போலியன் கைது

## தனிப்படை போலீசார் கன்னியாகுமரியில் விசாரணை



கன்னியாகுமரி ஏப்05

கன்னியாகுமரி , தக்கலை ஆகிய இடங்களில் போலீஸ் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து வந்தவர் நெப்போலியன். இவர் தற்போது தர்மபுரியில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறார்.

இவர் ஒரு கோடி ரூபாய் லஞ்சம் பெற்றதாக கைது செய்யப்பட்டார். கும்ப கோணத்தைச் சேர்ந்த ஆடிட்டர் ரவிச்சந்திரன் (68) என்பவர்,

கும்பகோணத்தில் ஆடிட்டராக பணியாற்றுகிறார். அவருக்கு குலசேகரநல்லூரில் 80 சென்ட் நிலம் உள்ளது. அரசு இதனை தடுப்பணை கட்டுவதற்காக கையகப் படுத்தியது.

நிலம் கையகப்படுத்தப்பட்ட பிறகு, 30 தேக்கும் மரங்களை வெட்டியதாக கிராம நிர்வாக அலுவலர் புகார் அளித்து, அரசு அதிகாரிகள் மரங்களை கைப்பற்றினர்.

நெப்போலியனின் மிரட்டல்.

இதற்குப் பிறகு, நெப்போலியன், தான் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரின் உறவினர் என்று பொய்யாக கூறியும் ஒரு குறிப்பிட்ட அமைச்சர் தனக்குநெருக்கமானவர் என்று கூறி "இந்த விவகாரத்தில் வழக்கு பதிவு செய்யாமல் தடுக்க சிபாரிசு செய்ய முடியும், அதற்கு ரூ.1 கோடி கொடுக்க வேண்டும்" என்று ரவிச்சந்திரனை மிரட்டியதாக கூறப்படுகிறது.

ரவிச்சந்திரன், மூன்று தவணைகளாக ரூ.1 கோடி கொடுத்துள்ளார். அதன் பிறகு, நெப்போலியன் மீண்டும் ரூ.1 கோடி கேட்டுள்ளார். இதனால் சந்தேகமடைந்த ரவிச்சந்திரன், தஞ்சாவூர் காவல் கண்காணிப்பாளர் க்கு புகார் அளித்தார்.

தஞ்சாவூர் மாவட்ட போலீஸ் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்ததை அடுத்து, மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் நெப்போலியனை தர்மபுரி டோல் பிளாசா அருகே கைது செய்து, தஞ்சாவூர் அழைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தஞ்சாவூர் அழைத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும், அவர் முந்தைய பணியிடங்களில் பல்வேறு பண மோசடிகளில் ஈடுபட்டிருக்கலாம் என்பதால், போலீசார் கன்னியாகுமரி , தக்கலை ஆகிய இடங்களில் விரிவான விசாரணை நடத்தி வருகின்றனர்.

கன்னியாகுமரியில் இரு குடும்பத்துடன் இவர் நெருங்கிய தொடர்பில் இருந்ததாக கூறப்படுகிறது. அந்த குடும்பத்தினர் பெயரில் சொத்துக்கள் வாங்கி குவித்து இருப்பதாகவும் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில் நேற்று கன்னியாகுமரி வந்த தனிப்படை போலீசார் அந்த வீட்டில் சோதனை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் தமிழக காவல் துறையில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


வித்யா கிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
(அழகப்பா பல்கலைக்கழக இணைவு பெற்றது)
(பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் சட்டம் 1956 பிரிவு 2(f) கீழ் அங்கீகரிக்கப்பட்டது)
வீரசேகரபுரம், சாக்கோட்டை மெயின் ரோடு, புதுவயல் – 630 108
Phone : 9344255157, 7598662776, E-mail : principalvcas@gmail.com

இரண்டாம் பட்டமளிப்பு விழா
ஏப்ரல் 5, 2025 சனிக்கிழமை, காலை 10.35 மணி
இடம் : அழகப்பா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக் கலையரங்கம், காரைக்குடி



மதிப்புறு கர்னல் பேரா. க. ரவி Ph.D.,D.Sc.
துணைவேந்தர்,
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி



தவத்திரு பொன்னம்பல அடிகளார்
குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி

சிறப்பு விருந்தினர்களாக வருகை தந்து, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்தி மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்குவார்கள்

PROGRAMMES OFFERED

Under Graduate Programmes :–
B.Sc (Artificial Intelligence, Computer Science, Information Technology)
B.Sc (Mathematics, Physics, Chemistry, Botany, Zoology, Biotechnology, Microbiology)
B.Com, B.Com (CA), BBA & BCA,
BA (Tamil, English, Economics, History)
B.Voc (Software Development)
Post Graduate Programmes :-
M.Com (CA), M.A (English),
M.Sc (Mathematics, Physics, Computer Science, Biotechnology, Microbiology)
Ph.D – Mathematics & Computer Science

Issue of Application Form for Admission (10.4.2025)

Applications are invited from eligible candidates for the post of Assistant Professor in all Subjects.
Download the Job Application Form from our Website.

பட்டமளிப்பு விழா சிறப்புற நடைபெற வாழ்த்தும்
ஸ்ரீ வித்யா கிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி
வீரசேகரபுரம், புதுவயல் – 630 108
வித்யா கிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளி
முத்துப்பட்டணம், காரைக்குடி – 630 001

: vidhyaagiri_college_puduvayal
: VIDHYAAGIRICOLLEGE
: vidhyaa giri institutions - Puduvayal, Karaikudi
: www.vidhyaagiricollege.ac.in

திரு MP. கிருஷ்ணன் – தலைவர்
முனைவர் R. சுவாமிநாதன் – முதல்வர் மற்றும் தாளாளர்
ஹாஜி M. முகமது மீரா – பொருளாளர்
S. ஐஸ்வர்யா சரண் சுந்தர் – முதன்மை நிர்வாக அதிகாரி




## சோழிங்கநல்லூர், கந்தன்சாவடியில் அ.தி.மு.க சார்பில் நீர், மோர், பந்தல் திறப்பு

கந்தன்சாவடி ஏப்05

சென்னை புறநகர் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட கந்தன் சாவடியில் அ.தி.மு.க சென்னை புறநகர் மாவட்ட கழகச் செயலாளர், முன்னாள் சோழிங்க நல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான கே.பி. கந்தன் தலைமையில் நீர், மோர், பந்தலை




முன்னாள் அமைச்சர், கழகத் தலைமை நிலைய செயலாளர், கோவை புறநகர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளருமான, எஸ். பி. வேலுமணி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், தர்பூசணி, வெள்ளரிக்காய், பலவகையான பழங்கள் மற்றும் நீர், மோர், வழங்கினார்.




சிவகங்கை மாவட்டம் காரைக்குடி கோவிலூர் மடாலயம் நிறுவனகளின் சார்பாக நாச்சியப்ப சுவாமிகள் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைபள்ளி வளாகத்தில் கல்வியியலின் தொழில்நுட்பம் பற்றிய ஆசிரியர்களுக்கான கருத்தரங்கம் நடைபெற்றது. கோவிலூர் ஆதீனம் சீர்வளர்சீர் நாராயண ஞான தேசிக சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கல்வி குழும தாளாளர் முனைவர் எம். வீரப்பன் கருத்தரங்கை துவக்கிவைத்தார். தேசியICT பயிற்சியாளர் பெர்சின் சிறப்புரையாற்றினார்.

## மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமாருக்கு மாலை தந்தி நாளிதழ் குழுமம் சார்பாக பிறந்தநாள் வாழ்த்துக்கள்



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்ற தொகுதி மறுசீரமைப்பில் இளையான்குடி, கடந்த 2011ம் ஆண்டு மானாமதுரையுடன் சேர்க்கப்பட்டது. மானாமதுரை தனித் தொகுதியாகும். மானா மதுரை, திருப்புவனம், இளையான்குடி முக்கிய பகுதியாக உள்ளது. மூன்று பேரூராட்சிகளை கொண்ட இந்தத் தொகுதி கடந்த 1952 ல் உருவாக்கப்பட்டபோது, முதன் முறையாக கிருஷ்ணசாமி அய்யங்கார் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர் 10 ஆண்டு காலமாக அஇஅதிமுக கோட்டையாக மானாமதுரை சட்டமன்ற தொகுதி திகழ்ந்தது அதே சமயத்தில் 2011ல் மானாமதுரை தொகுதியில் திமுக சார்பில் தமிழரசி ரவிக்குமார் போட்டியிட்டு அதிமுக வேட்பாளரிடம் தோல்வி அடைந்தார். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் 89,364 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். கடந்த ஆட்சியில் சட்டமன்ற உறுப்பினர்களாக பதவி வகித்த மானாமதுரை தொகுதியில் தொழிற்சாலை, அரசு கல்லூரி, தொழிற்ப யிற்சி நிறுவனம் ஏற்படுத்தப்படவில்லை.

அதற்காக இதுவரை இருந்து எம்.எல்.ஏ.,க்கள் முயற்சிக்கவில்லை. மானாமதுரையில் நிறைவேறாத கோரிக்கைகள் அதிகம் இருந்தது அதையெல்லாம் தகர்த்து எறிந்து ஒரு பெண் தன்னுடைய பலத்தால் எவ்வளவு சாதனைகள் செய்ய முடியுமோ அவ்வகையில் அடுக்கடுக்காக தன்னுடைய சாதனைகளை தொடங்க ஆரம்பித்தார்

அவ்வகையில் கடந்த சட்டமன்ற கூட்டுத்தொடரில் சிவகங்கை மாவட்டம் மானாமதுரைக்கு அரசு கலை மற்றும் கல்லூரி வேண்டுமென கோரிக்கை விடுத்ததை அடுத்து அமைச்சர் தங்கம் தென்னரசு பட்ஜெட் தாக்கலின் போது மானாமதுரைக்கு அரசு கலை மற்றும் கல்லூரி அமைக்கப்படும் என உறுதியளித்தார்.

எம்எல்ஏ தமிழரசியின் முயற்சியால் இந்த அறிவிப்பிற்கு மானாமதுரை சட்டமன்றத் தொகுதி சார்பாக நன்றியை தெரிவித்தார். கிராமப்புற மாணவர்களின் எதிர்காலத்தை பற்றி அண்ணியை இந்த முயற்சிக்கு முழு ஈடுபாடு செய்தது மக்களிடையே பெரும் நிகழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மக்களுக்கு என்ன தேவையோ அதை படிப்படியாக நிறைவேற்றி வரும் சரித்திரத்தில் இடம் பிடித்த நாயகி ஆ. தமிழரசி ரவிக்குமாரின் இந்த பிறந்தநாளில் வாழ்த்தி மாலை தந்தி நாளிதழ் வரவேற்று வாழ்த்தி வணங்குகிறோம்

## பழனியில் தவெக சார்பில் ஒன்றிய அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்

பழனி ஏப்.5

திண்டுக்கல் மாவட்டம் பழனி இரயில்வே சாலையில் உள்ள தந்தை பெரியார் சிலை அருகே தமிழக வெற்றிக் கழகம் சார்பாக ஒன்றிய அரசு தொடர்ந்து வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை கொண்டு வந்துள்ள நிலையில்




இஸ்லாமியர்கள் இச்சட்டத்தினால் வெகுவாக பாதிக்கப்படுவார்கள் என வலியுறுத்தி உடனடியாக ஒன்றிய அரசு வக்பு வாரிய சட்ட திருத்த மசோதாவை திரும்ப பெற வேண்டும் என வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

ஆர்ப்பாட்டத்தின் தலைமையாக மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் மற்றும் ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் விஜய் சிவா மாவட்ட செயற்குழு பாலமுருகன் நகர செயலாளர் மிதுன் மற்றும் ஒட்டன்சத்திரம் தொப்பம்பட்டி கொடைக்கானல் நகரச் செயலாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றன.

தொடர்ந்து ஒன்றிய அரசு மக்கள் விரோத போக்கை கடைபிடித்து வரும் நிலையில் மக்களின் நலனுக்காக பாடுபட வேண்டும் மக்களுக்கு எதிரான சட்டங்களை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என தவெக வினர் வலியுறுத்தி வருகின்றனர்.

அழகப்பா பல்கலைக்கழகம்
(1985- இல் தோற்றுவிக்கப்பட்ட மாநிலப் பல்கலைக்கழகம்)
காரைக்குடி – 630 003, தமிழ்நாடு, இந்தியா
www.alagappauniversity.ac.in

2018 MHRD Graded as Category-1 & Granted Autonomy
2018 MHRD Swachh Campus Rank : 4
2024 nirf Rank : 47 State Public University Rank : 17
2024 THE Young University Rank : 201-250 Asia University Rank : 251-300 World University Rank : 601-800
2024 QS Asian University Rankings India Rank : 32 Southern Asia Rank : 55 Asia Bandwidth : 271-280
2025 Accredited with A++ Grade by NAAC (CGPA : 3.59)

நிறுவுநர் நாள் விழா

அழகப்பா பல்கலைக்கழக நிறுவுநர் வள்ளல் அழகப்பரின்
116 - ஆவது பிறந்த நாள் விழா
நாள் : 06.04.2025, ஞாயிற்றுக்கிழமை

நேரம் : காலை 6.00 மணி, வள்ளல் அழகப்பர் நினைவு மரியாதைப் பேரணி
இடம் : பவநகர் விளையாட்டரங்கம் – வள்ளல் அழகப்பர் நினைவாலயம்

நேரம் : காலை 10.00 மணி, சொற்பொழிவு
இடம் : லெ.சித.லெ. பழனியப்ப செட்டியார் நினைவரங்கம்

பேராசிரியர் க.ரவி அவர்கள்
துணைவேந்தர், அழகப்பா பல்கலைக்கழகம்
தலைமையேற்கவும்

வள்ளல் அழகப்பரின் பெயரன்
முனைவர் வயிரவன் இராமநாதன் அவர்கள்
பல்கலைக்கழக ஆட்சிக்குழுவின் ஆயுட்கால உறுப்பினர்
முன்னிலை வகிக்கவும்

வள்ளல் அழகப்பரின் சுவீகாரப் புதல்வர்
திரு. AL . இராமநாதன் அவர்கள்
வாழ்த்துரை வழங்கவும்

முனைவர் இரா.மாது அவர்கள்
திருச்சிராப்பள்ளி
நிறுவுநர் நாள் விழா உரை நிகழ்த்தவும்
இசைந்துள்ளார்கள்.

நேரம்: பகல் 12.00 மணி : நிறுவுநர் நாள் விழா விருந்து
இடம் : பவநகர் விளையாட்டரங்கம்

அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பேராசிரியர் அ.செந்தில்ராஜன்
பதிவாளர்

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161